29.08.2017

தினமலர்

## பழங்கள் உற்பத்தியை அதிகரிக்க தோட்டக்கலை துறை முயற்சி

தமிழகத்தில் பழங்கள் உற்பத்தியை அதிகரிப்பதற்காக , சாகுபடி பரப்பை விரிவாக்கம் செய்யும் பணிகளை , தோட்டக்கலைத் துறை முடுக்கிவிட்டுஉள்ளது தமிழகம் . முழுவதும், 7 லட்சம் ஏக்கரில், பல்வேறு விதமான பழப் பயிர்கள் சாகுபடி நடக்கிறது . இதன்படி, ஆண்டுக்கு, 88 லட்சம் டன் பழ வகைகள் உற்பத்தியாகின்றன இது ., போதுமானதாக இல்லாததால், வெளிமாநிலங்களில் இருந்து, பழங்கள் விற்பனைக்கு வருகின்றன கூடுதல் விலை கொடுத்து ., மக்கள் அவற்றை வாங்க வேண்டிஉள்ளது . இதைக் கருத்தில் கொண்டு, பழங்கள் உற்பத்தியை அதிகரித்து , விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கச் செய்யும் முயற்சியில் , தோட்டக்கலைத் துறை ஈடுபட்டுள்ளது .

இது குறித்து, தோட்டக்கலைத் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது நாட்டின் பழங்கள்: உற்பத்தியில், உத்தர பிரதேசம் , மஹாராஷ்டிராவை அடுத்து , மூன்றாம் இடத்தில் , தமிழகம் உள்ளது வாழை சாகுபடியில் முதலிடத்தில் உள்ள நாம் ., மற்ற பழங்களின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் தற்போது ., 7.08 லட்சம் ஏக்கராக உள்ள சாகுபடி பரப்பை, 7.75 லட்சம் ஏக்கராக உயர்த்த , முயற்சி மேற்கொள்ளப்பட உள்ளது . இதற்காக, தோட்டக்கலைத் துறையில் உள்ள நவீன தொழில் நுட்பங்கள் , பண்ணை இயந்திரமயமாக்குதல் குறித்து, விவசாயிகளுக்கு பயிற்சிகள் வழங்க , அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதுமத்திய ., மாநில அரசுகளின் திட்டங்கள் வழியாக , விவசாயிகளுக்கு பல்வேறு உதவிகள் கிடைக்கின்றன . இவ்வாறு அவர் கூறினார் .

- நமது நிருபர் –

## கால்நடை வளர்ப்புக்கு, 'ஆப்' : விவசாயிகளிடம் மவுசு

தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலை அறிமுகம் செய்துள்ள , இரு மொபைல் போன், 'ஆப்'களை, 45 ஆயிரம் விவசாயிகள் , பதிவிறக்கம் செய்துள்ளனர் .

இது குறித்து , தமிழ்நாடு கால்நடை மருத்துவ கல்லூரியின் , விரிவாக்க கல்வி இயக்குனர், சுதீப்குமார் கூறியதாவது தமிழகத்தில் :, கால்நடை மருத்துவ கல்லூரி சார்பில், மூன்று வேளாண் அறிவியல் மையங்கள் ; 20 பயிற்சி மையங்கள் ; மூன்று உழவர் பயிற்சி மையங்கள் செயல்படுகின்றன இங்கெல்லாம் ., ஆடு, மாடு உள்ளிட்ட கால்நடைகள் மற்றும் கோழிகள் வளர்க்கும் விவசாயி களுக்கு தேவையான பயிற்சிகள், அறிவுரைகள் ஆண்டு முழுவதும் வழங்கப்படுகின்றன இதுகுறித்த கால . அட்டவணை, விவசாயிகளுக்கு சென்று சேருவதில் சிரமம் இருந்தது அதனால் ., பல்கலை சார்பில் , 'training calendar' என்ற, மொபைல் போன் , 'ஆப்' வடிவமைக்கப்பட்டதுஇதை ., 'கூகுள் பிளே ஸ்டோரில் ' பதிவிறக்கம் செய்து , ஆண்டு முழுவதும் அளிக்கப்படும் பயிற்சிகளுக்கான கால அட்டவணையை காணலாம் . இதேபோல, கால்நடைகளின் எடையை கண்டுபிடித்து , அதற்கேற்ப, எவ்வளவு தீவனம் தர வேண்டும் என , உரிமையாளர்கள் தெரிந்து கொள்ள , 'feed calculator' என்ற, 'ஆப்'பும் உருவாக்கப்பட்டுள்ளது இவற்றுக்கு ., விவசாயிகளிடையே மவுசு அதிகரித்துள்ளதுஇதுவரை ., 45 ஆயிரம் பேர் பதிவிறக்கம் செய்துள்ளனர் இவ்வாறு . .அவர் கூறினார்

- நமது நிருபர் –

தினமணி

## நீலகிரியில் மீண்டும் பரவலாக மழை

நீலகிரி மாவட்டத்தில் மீண்டும் பரவலாக மழை பெய்யத் தொடங்கியுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் கடந்த வாரத்தில் தொடர் மழை பெய்ததை அடுத்து , 3 நாள்களாக மழை இல்லாமல் இதமான காலநிலை நிலவியது. இந்நிலையில் , மாவட்டத்தில் மீண்டும் பரவலாக மழை பெய்யத் தொடங்கியுள்ளது. மாலை நேரங்களில் தொடங்கி , விடிய விடிய மழை பெய்து வருகிறது. பகல் நேரங்களில் மேகமூட்டம் காணப்படுவதால் குளிர்ச்சியான காலநிலை நிலவுகிறது.
மாவட்டத்தில் திங்கள்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் அவலாஞ்சியில் 50 மி.மீ., தேவாலாவில் 47 மி.மீ., நடுவட்டத்தில் 40 மி.மீ., கூடலூரில் 35 மி.மீ., கிளன்மார்கனில் 26 மி.மீ., அப்பர் பவானியில் 20 மி.மீ., எமரால்டில் 14 மி.மீ.,

உதகையில் 12 மி.மீ., கல்லட்டியில் 8 மி.மீ., குந்தா, குன்னூரில் தலா 5 மி.மீ., பர்லியாறு, கோத்தகிரியில் தலா 3 மி.மீ., கெத்தையில் 1 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் திங்கள்கிழமை காலையிலிருந்தே பல்வேறு இடங்களிலும் பரவலாக மழைப் பொழிவு இருந்தது. உதகை சுற்று வட்டாரத்தில் மேகமூட்டத்துடன் கூடிய மழை இருந்தது. தொடர் மழை காரணமாக உதகை பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இரவில் துண்டிக்கப்பட்ட மின் விநியோகம் திங்கள்கிழமை காலையில்தான் சீரடைந்தது.

## தமிழகத்தில் இன்று மழை பெய்யும்

தமிழகம், புதுச்சேரியில் ஆங்காங்கே சில இடங்களில் செவ்வாய்க்கிழமை மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வட மேற்கு வங்கக்கடல் , அதை ஒட்டியுள்ள பகுதியில் ஒரு காற்றழுத்த தாழ்வு நிலை மையம் கொண்டுள்ளது. மேல் அடுக்கு சுழற்சியும் நீடிக்கிறது. இதன்காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியின் சில இடங்களில் செவ்வாய்க்கிழமை மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். சென்னையில் வானம் மேகமூட்டமாக இருக்கும். சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கர்நாடகத்தில் மழை தீவிரம் : தென் மேற்குப் பருவமழை தற்போது கடலோர ஆந்திரப்பிரதேசம், கேரளம், கர்நாடகம் ஆகிய பகுதிகளில் தீவிரமடைந்துள்ளது. இதனால் அங்கு பெரும்பாலான இடங்களில் மழை பெய்து வருகிறது. தமிழகத்தின் சில இடங்களில் பரவலாக மழை பெய்கிறது. இந்த மழை திங்கள்கிழமையும் தொடர்ந்தது.

சின்னக்கல்லாறில் 60 மி.மீ...: தமிழகத்தில் திங்கள்கிழமை காலை நிலவரப்படி , கோவை மாவட்டம் சின்னக்கல்லாறில் 60 மி.மீ. மழை பதிவானது. நீலகிரி மாவட்டம் தேவாலா, வால்பாறை தாலுகா அலுவலகம் , மணமேல்குடி, நடுவட்டம், கூடலூர் பஜாரில் தலா 40 மி.மீ., காஞ்சிபுரம், தேனி மாவட்டம் பெரியாறு , கிருஷ்ணகிரி மாவட்டம் தளியில் 30 மி.மீ., உதகமண்டலம், பாபநாசத்தில் தலா 20 மி.மீ. மழை பதிவானது. உத்தரமேரூர் , திருப்பத்தூர் பேச்சிப்பாறை , தேவகோட்டை, காவேரிப்பாக்கம், அறந்தாங்கி, தக்கலை, செங்கல்பட்டு, செம்பரம்பாக்கத்தில் தலா 10 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

## மேட்டூர் அணை

### நீர்மட்டம் 56.47 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை காலை 56. 47 அடியாக உயர்ந்துள்ளது.

அணைக்கு நொடிக்கு 6,961 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 1,300 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டிருந்தது. அணையின் நீர் இருப்பு 22.12 டி.எம்.சி. மேட்டூர் அணையிலிருந்து குடிநீருக்குத் திறக்கப்படும் நீரின் அளவைவிட அணைக்கு வரும் நீரின் அளவு அதிகமாக இருப்பதால் , அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது.